**பொது நூலக இயக்குநரின் செயல்முறைகள்**
**சென்னை-600 002**

ந.க.எண். 6523/அ1/2023 நாள். 06 .11.2023

பொருள்: பணியாளர் தொகுதி – பொது நூலக இயக்ககம் – மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் – நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர் பணியிடம் – 01.01.2023 நாளின்படியான வரைவுப் பணிமூப்புப் பட்டியல் – வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.1735, கல்வித் துறை, நாள் 11.12.1989.
2. அரசுக் கடிதம் (நிலை) எண்.769, கல்வித் (கே2) துறை, நாள் 06.06.1990.
3. அரசாணை (நிலை) எண்.60, பள்ளிக் கல்வித் (கே2) துறை, நாள் 27.04.2006.
4. அரசாணை (நிலை) எண்.171, பள்ளிக் கல்வித் (கே2) துறை, நாள் 13.09.2006
5. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்கள் 24947, 24250, 18231, 18232, 18233, 18707 மற்றும் 36061/2007–இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 08.04.2009.
6. அரசாணை (நிலை) எண்.107, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 18,08.2009.
7. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேல் முறையீட்டு மனு எண்கள்.1173/2010 – 1178/2010, 911/2009 – 919/2009 மற்றும் 520/2009 – 522/2009 மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 20.09.2010.
8. அரசாணை (நிலை) எண்.116, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 18,08.2010.
9. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.114/2010–இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 06.12.2010.
10. அரசாணை (நிலை) எண்.65, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எஸ்) துறை, நாள் 02.07.2014.
11. உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்கள் Civil Appeal Nos.1100 – 1103 of 2015–இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 21.01.2015.
12. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.20475/2012–இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 19.01.2017.

13. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண்.202/2017–இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 12.04.2017.
14. அரசாணை (நிலை) எண்.144, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 20.11.2017.
15. உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்கள் 1611 – 1614 of 2017–இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 24.01.2018.
16. சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேல் முறையீட்டு மனு எண்.W.A.No.213/2018–இன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 19.07.2019.

----------

பார்வை (1) முதல் (4) (6) வரையுள்ள அரசாணைகள், அரசுக் கடிதம் மற்றும் பார்வை (5), (7), (9), (11), (12), (13), (15) மற்றும் (16)–இல் காணும் சென்னை உயர்நீதி மன்றம் / உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணைகள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்களின் மீது பெறப்பட்ட தீர்ப்பாணைகளின்படி, பொது நூலக இயக்ககத்தின் கீழ் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றி வரும் அனைத்து நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள் / இரண்டாம் நிலை நூலகர்களின் பணிமூப்புப் பட்டியல் நிர்ணயம் செய்யும் பொருட்டு, நூல் சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர்களின் அடிப்படை விவரங்கள் (அரசுப் பணி / மூன்றாம் நிலை நூலகர் / நூல் சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாள், பிறந்த நாள், வயது முதிர்வு நாள், பத்தாம் வகுப்பு (SSLC), நூலகவியல் சான்றிதழ் பட்டயம் (CLIS), பன்னிரெண்டாம் வகுப்பு (HSC) / +2–க்கு இணையான PUC / Diploma, இளங்கலைப் பட்டம் (UG), இளங்கலை நூலகவியல் பட்டம் (BLIS), முதுகலைப் பட்டம் (PG) மற்றும் முதுகலை நூலகவியல் பட்டம் (MLIS) ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற நாள், தற்காலிக மற்றும் நிரந்தரப் பதவி உயர்வு துறப்பு விவரம், தண்டனைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவை விவரம்) மாவட்ட நூலக அலுவலர்களிடமிருந்து பெற்று தொகுக்கப்பட்டு, உரிய அரசாணைகள் மற்றும் விதிமுறைகளின்படி நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர் பணியிடங்களுக்கு 2023 ஆம் ஆண்டிற்கான (அக்டோபர் 2023 மாதம் வரை ஓய்வு, விருப்ப ஓய்வு, மற்றும் இறந்த

பணியாளர்கள் பெயர்களை தவிர்த்து) வரைவுப் பணிமூப்புப் பட்டியல் (Draft Seniority List) இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

2. அதன்படி 32 மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் 179 நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள்/இரண்டாம் நிலை நூலகர்கள் பணியாற்றி வருகின்றனர்.

3. அரசாணை (நிலை) எண்.107, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 18,08.2009, அரசாணை (நிலை) எண்.116, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 18,08.2010 மற்றும் அரசாணை (நிலை) எண்.65, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எஸ்) துறை, நாள் 02.07.2014–இன்படி,

(i) பத்தாம் வகுப்பு (SSLC) மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு (HSC) தேர்ச்சி பெற்ற பின்னர் பல்கலைக்கழக மானியக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட திறந்தவெளி பல்கலைக் கழகங்களின் வாயிலாகப் பெறப்படும் பட்டயம் (Diploma);

(ii) பத்தாம் வகுப்பு (SSLC) மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு (HSC) தேர்ச்சி பெற்ற பின்னர் பல்கலைக்கழக மானியக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட திறந்தவெளி பல்கலைக் கழகங்களின் வாயிலாகப் பெறப்படும் இளங்கலைப் பட்டம் (Bachelor Degree);

(iii) பத்தாம் வகுப்பு (SSLC), பன்னிரெண்டாம் வகுப்பு (HSC) மற்றும் இளங்கலைப் பட்டம் (Bachelor Degree) தேர்ச்சி பெற்ற பின்னர் பல்கலைக்கழக மானியக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட திறந்தவெளி பல்கலைக் கழகங்களின் வாயிலாகப் பெறப்படும் முதுகலை பட்டம் (Post Graduate);

ஆகிய கல்வித் தகுதிகள் பொதுப் பணிகளில் நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கு உரிய கல்வித் தகுதிகளாக நிர்ணயிக்கப்பட்டு, இவ்வரசாணைகள் வெளியிடப்பட்ட நாள் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அரசாணை (நிலை) எண்.144, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 20.11.2017–இல், Pre–foundation Course பத்தாம் வகுப்பிற்கு இணையானது அல்ல

எனவும் Foundation Course பன்னிரெண்டாம் வகுப்பிற்கு இணையானது அல்ல என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

4. இதனைத் தொடர்ந்து, மேலே பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகளின்படி உரிய கல்வித் தகுதிகள் பெறாத நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர்கள் இப்பணிமூப்புப் பட்டியலில் இடம் பெற்றிருப்பினும், இவ்வரசாணைகளின்படி முறையான மற்றும் உரிய கல்வித் தகுதியினைப் பெறாமல் பதவி உயர்வு வேண்டி எவ்வித முன்னுரிமையும் கோருவதற்கு வழிவகை இல்லை.

5. மேலும், அரசாணை (நிலை) எண்.1735, கல்வித் துறை, நாள் 11.12.1989-க்கு திருத்தம் வெளியிடப்பட்ட அரசுக் கடிதம் (நிலை) எண்769, கல்வித் (கே2) துறை, நாள் 06.06.1990-இன்படி மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் ஓரலகு நடைமுறையினை செயல்படுத்தும் பொருட்டு பணி நியமனம், இடமாறுதல் மற்றும் பதவி உயர்வு போன்றவைகளுக்கு மாநில அளவிலான பணி மூப்பினை இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்திலிருந்து (From the Level of Librarian Grade II) பராமரிக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பாணைகள் மற்றும் அரசாணை (நிலை) எண்.60, பள்ளிக் கல்வித் (கே2) துறை, நாள் 27.04.2006-இன்படி, நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்திற்கான நியமன அலுவலர் பொது நூலக இயக்குநர் ஆவார் என்பதைத் தொடர்ந்து, விதிமுறைகளின்படி நூலக ஆய்வாளர் / முதல் நிலை நூலகர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கக் கருதப்படும் ஊட்டுப் பணியிடமான நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர் பணியிடத்தில் பணியாற்றும் பணியாளர்கள் குறித்து அனைத்து மாவட்ட நூலக ஆணைக்குழுக்களிலிருந்து பெறப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் ஆவணங்களின்படி தொகுத்து, வகைப்படுத்தப்பட்டு, உரிய விதிமுறைகள் மற்றும் அரசாணைகளின்படி நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர் / இரண்டாம் நிலை நூலகர்

பணியிடங்களுக்கு 01.01.2023 நாளின்படியான வரைவுப் பணிமூப்புப் பட்டியல் (Draft Seniority List) கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வெளியிடப்படுகிறது.

(i) பார்வை (11) மற்றும் (15)–இல் காணும் உச்ச நீதிமன்ற ஆணையின்படி, நூலக ஆய்வாளராகப் பணியாற்றி வரும் திரு.மு.ப.காரல்மார்க்ஸ் என்பவர் மாநில பணிமூப்பில் நூலக ஆய்வாளர் / முதல் நிலை நூலகர் பணியிடத்திற்கான பணி மூப்பினை 01.01.2023 அன்று அடையாத நிலையில், தனியரது பெயர் இவ்வரைவுப் பணி மூப்புப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

(ii) பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் மாவட்ட நூலக ஆணைக்குழுக்களில் பணியாற்றும் நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள் / இரண்டாம் நிலை நூலகர்களின் இப்பணிமூப்புப் பட்டியலை, பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர்கள் அனைவருக்கும் உடனடியாக வழங்குமாறும், இப்பணிமூப்புப் பட்டியலில் விடுதல், மாறுதல் அல்லது பிழைகள் (Factual Errors) ஏதும் இருப்பின் சம்பந்தப்பட்ட பணியாளர்களிடமிருந்து இது குறித்த முழுமையான விவரத்தைப் பெற்று, உரிய ஆவணங்கள் மற்றும் குறிப்புரைகளுடன் **25.11.2023**–க்குள் இவ்வியக்கத்திற்கு தவறாது அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(iii) இச்செயல்முறைகளுடன் இணைத்து அனுப்பி வைக்கப்படும் பணிமூப்புப் பட்டியலில் உள்ள பணியாளர்களின் மீது வழங்கப்பட்ட தண்டனைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவை ஏதும் இருப்பின் அதன் விவரத்தினை தவறாது குறிப்பிடுமாறு அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(iv) மேற்காணும் பணிமூப்புப் பட்டியலில் விடுதல், மாறுதல் அல்லது பிழைகள் (Factual Errors) ஏதும் இருப்பின் அது பற்றிய முழுமையான விவரத்தை மாவட்ட நூலக அலுவலர்கள் வழி முறையாக 25.**11.2023**–க்குள் இவ்வியக்ககத்தில் கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பி வைக்குமாறு பட்டியலில் இடம் பெற்றுள்ள சம்பந்தப்பட்ட நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள் / இரண்டாம் நிலை நூலகர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(v) மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் (25.11.2023) மாவட்ட நூலக அலுவலர்களிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லையெனில், தனியர்கள் / அலுவலர்கள் மூலம் மறுப்புரை தெரிவிக்க ஏதுமில்லை எனக் கருதி, இறுதி பணிமூப்புப் பட்டியல் வெளியிடப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(vi) காலம் கடந்து மாவட்ட நூலக அலுவலர்கள் மூலம் பெறப்படும் தனியர்களின் மறுப்புரைகள் / கோரிக்கைகள் ஏதும் பரிசீலனைக்கு ஏற்க இயலாது.

(vii) இப்பணிமூப்புப் பட்டியல் மின்னஞ்சல் வழியாகவும் அனுப்பி வைக்கப்படுகிறது. இச்செயல்முறைகளைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை உடனடியாக இவ்வியக்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பணிமூப்புப் பட்டியல்

பொது நூலக இயக்குநர்

பெறுநர்:
1. அனைத்து மாவட்ட நூலக அலுவலர்கள்
2. அனைத்து நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்கள்/இரண்டாம் நிலை நூலகர் (மாவட்ட நூலக அலுவலர் வழிமுறையாக)

நகல்: முக்கிய ஆணைத் தொகுப்புக் கோப்பு.